**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.223/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு. ஈஸ்வரன் |
| Husband/Father Name | தனசேகர் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கல்லூரி மாணவர் |
| Age | 18 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.09.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 காயமுற்றவர் என்னுடைய அண்ணன் ஆவார். அசா.2 என்னுடைய தந்தை ஆவார். 16.06.2024 அன்று மதியம் 02.00 மணியளவில் நான் சாப்பிடும் போது தெரியாத எண்ணில் இருந்து எனக்கு போன் வந்தது எனது அண்ணன் கண்ணனுக்கு காயம் பட்டதாகவும் புகார் கொடுத்தால் தான் மருத்துவமனையில் அட்மிஷன் போடுவாதாக கூறியதன் அடிப்படையில் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு என் அண்ணனுக்கு காதில் நரம்பு அறுந்துவிட்டதாகவும் மேல் சிகிச்சைக்காக திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். பிறகு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்று காதில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்தோம். சென்னை மருத்துவமனையில் உள் நோயாளியாக 40

நாட்கள் சிகிச்சைகாக இருந்தார். என் அண்ணனை அடித்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போன் முலம் கிடைத்த தவலின் அடிப்படையில் தான் என் அண்ணனை நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். இவ்வழக்கில் நான் கேள்வி பட்டதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் அண்ணனை அடித்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல விசாரித்தார்கள். போலீசார் கேட்டுகொண்டதன் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பாதிக்கப்பட்டவர் என் அண்ணன் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.24 16:08:38 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.